**கத்ய த்ரயம் விளக்கம்**

(ஶ்ரீ தேசிக ஸம்ப்ரதாயம்)

1. பகவத் ராமானுஜரின் ஶ்ரீவைகுண்ட கத்யம் - விளக்கம் - ***சூர்ணிகை எண் - 3*** (பாகம் - 4)

***ஶ்ரீமத் வைகுண்டை ஐஸ்வர்யாதி திவ்ய லோகம் ஆத்ம காந்த்யா விச்வமாப்யாயயந்த்யா சேஷ சேஷாசநாதி ஸர்வம் பரிஜநம் பகவத: தத் ததவஸ்தோசித பரிசர்யாயாம் ஆக்ஞாபயந்த்யா சீல ரூப குண விலாஸாதிபி: ஆத்மாநுரூபயா ச்ரியா ஸஹாஸீநம்*** - பிராட்டியோடு சேர்த்தி

***ப்ரத்யக்ர உந்மீலித ஸரஸிஜ ஸத்ருச நயந யுகளம் ஸ்வச்ச நீல ஜீமூத ஸங்காசம் அத்யுஜ்வல பீத வாஸஸம் ஸ்வயா ப்ரபயா அதி நிர்மலயா அதி சீதலயா அதி கோமலயா ஸ்வச்சயா மாணிக்யாபயா க்ருத்ஸ்நம் ஜகத் பாவயந்தம் அசிந்த்ய திவ்ய அத்புத நித்ய யௌவந ஸ்வபாவ லாவண்ய மய அம்ருத ஸாகரம் அதி ஸௌகுமார்யாத் ஈஷத் ப்ரஸ்விந்நவத் அலக்ஷ்யமாண லலாடபலக திவ்ய அலகாவலீ விராஜிதம் ப்ரபுத்த முக்த அம்புஜ சாருலோசநம் ஸவிப்ரமப்ரூலதம் உஜ்வலாதரம் சுசிஸ்மிதம் கோமல கண்டம் உந்நஸம் உதக்ரபீந அம்ஸ விலம்பி குண்டல அலகாவலீ பந்துர கம்புகந்தரம் ப்ரியாவதம்ஸ உத்பல கர்ண பூஷண ச்லத அலகாபந்த விமர்த சம்ஸிபி: சதுர்பி: ஆஜாநு விலம்பிபிர்புஜை: விராஜிதம் அதி கோமல திவ்ய ரேகாலங்க்ருத ஆதாம்ரகரதலம் திவ்ய அங்குலீயக விராஜிதம் அதி கோமல திவ்ய நகாவலீ விராஜிதம் அநுரக்தாங்குலீபி: அலங்க்ருதம் தத்க்ஷண உந்மீலித புண்டரீக ஸத்ருச சரணயுகளம்*** - திருமேனி

***அதிமநோஹர கிரீட மகுட சூடாவதம்ஸ மகர குண்டல க்ரைவேயக ஹார கேயூர கடக ஶ்ரீவத்ஸ கௌஸ்துப முக்தாதாம உதரபந்தந பீதாம்பர காஞ்சீகுண நூபுராதிபி: அத்யந்த ஸுக ஸ்பர்சை: திவ்ய கந்தை: பூஷணைர்பூஷிதம்*** - திவ்ய ஆபரணங்கள்

***ஶ்ரீமத்யா வைஜயந்த்யா வநமாலயா விராஜிதம்*** - திருமாலை

***சங்க சக்ர கதாஸி சார்ங்காதி திவ்யாயுதை: ஸேவ்யமாநம்*** - திவ்ய ஆபரணங்கள்

2. ***சூர்ணிகை பத உரை*** :

# ***ஶ்ரீமத் வைகுண்டை ஐஸ்வர்யாதி திவ்ய லோகம் ஆத்ம காந்த்யா விச்வமாப்யாயயந்த்யா*** - இத்துனை அழகும் செல்வமும் படைத்த நித்ய விபூதியை தன் ஆளுமையால் மேலும் அழகு சேர்த்து

# ***சேஷ சேஷாசநாதி ஸர்வம் பரிஜநம் பகவத: தத் ததவஸ்தோசித பரிசர்யாயாம் ஆக்ஞாபயந்த்யா*** - அனந்த கருட விஷ்வக்ஸேனாதி நித்யஸூரிகளை கைங்கர்யங்கள் புரியும் வண்ணம் நியமித்து

# ***சீல ரூப குண விலாஸாதிபி: ஆத்மாநுரூபயா ச்ரியா ஸஹாஸீநம்*** - ஒத்த குணங்களை உடைய எம்பெருமானும் பெரிய பிராட்டியாரும் அந்த கைங்கர்யங்களை ஸ்வீகரிக்கின்றனர் என்றபடி.

# ***ப்ரத்யக்ர உந்மீலித ஸரஸிஜ ஸத்ருச நயந யுகளம்*** - அன்று அலர்ந்த தாமரைப் போன்ற அவன் கண்கள் மலர்ந்து காணப்படுகின்றன

# ***ஸ்வச்ச நீல ஜீமூத ஸங்காசம் அத்யுஜ்வல பீத வாஸஸம் ஸ்வயா ப்ரபயா*** - நிர்மலமான ஆகாசத்தைப் போன்ற ப்ரகாசமான திருமேனியும், ஒளி வீசிம் ஆடையும், தன் தேஜஸினால் உண்டாகும் ப்ரபாவத்தால்

# ***அதி நிர்மலயா அதி சீதலயா அதி கோமலயா ஸ்வச்சயா மாணிக்யாபயா க்ருத்ஸ்நம் ஜகத் பாவயந்தம்*** - தூய்மையான, குளிர்ச்சியான, இனிமையானதாக, தெளிவாக, ஒளியோடு இருந்து உலகினை துலங்கச் செய்கிறான்.

# ***அசிந்த்ய திவ்ய அத்புத நித்ய யௌவந ஸ்வபாவ லாவண்ய மய அம்ருத ஸாகரம்*** - கற்பனைக்கு எட்டாத, மங்களகரமான, வியப்பை உண்டாக்க வல்ல, அழியாததான இளமையுடன், இத்தகைய தனமைகளைக் கொண்டது அமிர்தக் கடலான அவன் திருமேனி

**கத்ய த்ரயம் விளக்கம்**

(ஶ்ரீ தேசிக ஸம்ப்ரதாயம்)

# *அதி ஸௌகுமார்யாத் ஈஷத் ப்ரஸ்விந்நவத் அலக்ஷ்யமாண லலாடபலக திவ்ய அலகாவலீ விராஜிதம்* - அதி மென்மையான வழ வழப்பான அகண்ட நெற்றியில் தவழ்ந்து விளையாடும் திருக்கூந்தல்களை உடையவன்

# *ப்ரபுத்த முக்த அம்புஜ சாருலோசநம் ஸவிப்ரமப்ரூலதம் உஜ்வலாதரம் சுசிஸ்மிதம் கோமல கண்டம் உந்நஸம்* - சிரிப்பது போன்ற கண்களும், மலர்ந்த தாமரைப் போன்ற கண்களும், வில் போன்ற புருவங்களும், பவள திரு வாயும், கபடமற்ற புன்முறுவல் கொண்டவனும், மென்மையான கண்டமும், எடுப்பான மூக்கை உடையவனும்

# *உதக்ரபீந அம்ஸ விலம்பி குண்டல அலகாவலீ பந்துர கம்புகந்தரம் ப்ரியாவதம்ஸ உத்பல கர்ண பூஷண ச்லத அலகாபந்த விமர்த சம்ஸிபி:* - திருக் காதுகளில் நீண்ட குண்டலங்கள், திருகழுத்து வரை அழகாக புரளும் ஸிரஸ் கூந்தல், அழகான திருக் கழுத்து, முழங்கால் வரை நீண்ட திருக் கைகள், பெரிய பிராட்டியாரின் காதுகள்ல் உள்ள நீல மலர்கள் எம்பெருமான் தனது காதுகள்ல் கொண்ட கர்ண மலர்கள்

# *சதுர்பி: ஆஜாநு விலம்பிபிர்புஜை: விராஜிதம் அதி கோமல திவ்ய ரேகாலங்க்ருத ஆதாம்ரகரதலம் திவ்ய அங்குலீயக விராஜிதம்* - நான்கு தோள்களைக் கொண்ட எம்பெருமான், திருக்கரங்களில் சங்கு, சக்கரம், தாமரை, கற்பகம், அங்குசம், வஜ்ராயுதம் போன்றவைகளைக் கொண்டவன், வில்களில் மோதிரங்களைக் கொண்டவன்

# *அதி கோமல திவ்ய நகாவலீ விராஜிதம் அநுரக்தாங்குலீபி: அலங்க்ருதம் தத்க்ஷண உந்மீலித புண்டரீக ஸத்ருச சரணயுகளம்* - விரல்களில் சீரான நகங்கள், சிவந்த நீண்ட விரல்கள் இது போன்ற திருமேனி ஸௌந்தர்யத்தைக் கொண்ட ஸர்வேஸ்வரன், புதிதாக மலர்ந்த தாமரை போன்ற மிருதுவான தனது திருவடிகள் உடையவன் ; அந்த திவ்ய திருவடிகள் அனைவருக்கும் சரணம் புக ஏற்றதாகிறது

# *அதிமநோஹர கிரீட மகுட சூடாவதம்ஸ மகர குண்டல க்ரைவேயக ஹார கேயூர கடக* - இனிமையான ஸிரஸை அலங்கரிக்கும் மகுடமாகவும், திரு நெற்றி, திருக்காது, திருக்கழுத்து, திருமார்பு, திருத்தோள், திருக்கை ஆகிய அங்கங்களில் அலங்கரிப்பதாயும்

# *ஶ்ரீவத்ஸ கௌஸ்துப முக்தாதாம உதரபந்தந* - திருமார்பில் கௌஸ்துபமாகவும், திரு இடுப்பில் உள்ள ஒட்டியாணம் போன்றதும்

# *பீதாம்பர காஞ்சீகுண நூபுராதிபி:* - பட்டாடை, அரைக்ஞான், சிலம்பு ஆகிய ஆபரணங்களும்

# *அத்யந்த ஸுக ஸ்பர்சை: திவ்ய கந்தை: பூஷணைர்பூஷிதம்* - மென்மையானதாக நறுமணம் கொண்டதாக அலங்கரிக்கப் பட்டுள்ளான்

# *ஶ்ரீமத்யா வைஜயந்த்யா வநமாலயா விராஜிதம்* - அழகானதும் வைஜயந்தி என்கிற மாலையை திரித்துள்ளான்

# *சங்க சக்ர கதாஸி சார்ங்காதி திவ்யாயுதை: ஸேவ்யமாநம்* - நித்யஸூரிகளான பஞ்சாயுதங்கள் (சங்கு, சக்கரம், கதை, வில், வாள்) அவனுக்கு பல்லாண்டு பாடி அவனை அநுபவிக்கின்றனர்.

3. ***சூர்ணிகை விளக்கம்*** :

# சுதர்சனம் - சக்கரம் - பஞ்சாயுத ஸ்தோத்திரம்

***ஸ்புரத் ஸஹஸ்ரார ஸுகாதி தீவ்ரம் ஸுதர்ஸநம் பாஸ்கர கோடி துல்யம் ஸுரத்விஷாம் ப்ராணவிநாஸி விஷ்ணோ: சக்கரம் ஸதாஹம் சரணம் ப்ரபத்யே***

**கத்ய த்ரயம் விளக்கம்**

(ஸ்ரீ தேசிக ஸம்ப்ரதாயம்)

தீச்சுடரைப் போல பல மடங்கு ஒளி விட்டு பிரகாசிப்பதும், வல்லமை பொருந்தியதும், கோடி சூரியர்களின் கதிர்கள் ஒன்றாகத் திரண்டது போலப் பிரகாசமானதும், அசுரர்களை நாசப்படுத்துவதுமான ஸ்ரீவிஷ்ணு பகவானின் சுதர்சனம் என்னும் சக்கரத்தைப் போற்றி வணங்குகிறேன்.

# பாஞ்சஜன்யம் - சங்கு - பஞ்சாயுத ஸ்தோத்திரம்

*விஷ்ணோர் முகோத்தாநில பூரிதஸ்ய யஸ்யத்வநிர் தானவ தர்ப்பஹந்தா: தம் பாஞ்ச ஜன்யம் சசி கோடி சுப்ரம் சங்கம் ஸதா அஹம் சரணம் ப்ரபத்யே*

மகாவிஷ்ணுவின் பவளச் செவ்வாய் வழியே வெளி வரும் காற்றினால் ஒலி எழுப்பப்படுவதும், தனது கம்பீர ஓசையால் அசுரர்களுக்கு அச்சத்தைக் கொடுக்கக் கூடியதும், வெண்மை வண்ணத்தில் ஒரு கோடி நிலவுகளின் ஒளிக்கு ஈடானதுமான பாஞ்சஜன்யம் என்ற சங்கை எப்போதும் சரணமடைகிறேன்.

# கௌமோதகம் - கதை - பஞ்சாயுத ஸ்தோத்திரம்

*ஹிரண்மயீம் மேரு ஸமான ஸாரம் கௌமேதகீம் தைத்ய குலைக ஹந்த்ரீம் வைகுண்ட வாமாக்ரகரா பிம்ருஷ்டாம் கதாம் ஸதாஹம் சரணம் ப்ரபத்யே*

பொன்மயமான மேரு மலையைப் போன்ற ஒளியுள்ளதும், அசுரர்களின் குலத்தையே அழிக்கக் கூடியதும், வைகுண்ட வாசனின் கைநுனிகளின் ஸ்பரிச பாக்யம் பெற்றதான கௌமோதகம் என்ற கதையை சதா சரணமடைகிறேன்.

# நந்தகம் - வாள் - பஞ்சாயுத ஸ்தோத்திரம்

*ரக்ஷோ ஸுராணாம் கடிநோக்ர கண்டச் சேதக்ஷரச் சோணித திக்ததாரம் தம் நந்தகம் நாம ஹரே ப்ரதீப்தம் கட்கம் ஸதாஹம் சரணம் ப்ரபத்யே*

கொடிய அரக்கர்களின் கழுத்தைத் துண்டிப்பதால் பிரவாகிக்கும் ரத்தத்தில் மூழ்கி, செந்நிற ஒளியுடன் காட்சி தரும் நந்தகம் எனும் பெயருடைய வீர வாளை என்றும் சரணமடைகிறேன்.

# சார்ங்கம் - வில் - பஞ்சாயுத ஸ்தோத்திரம்

*யஜ்ஜ்யாநீ நாத ஸ்ரவபணாத் ஸுராணாம் சேதாம்ஸி நிர்முக்த பயாநி ஸத்ய: பவந்தி தைத்யாஸநி பர்ணவர்ஷ ஸார்ங்கம் ஸதாஹம் சரணம் ப்ரபத்யே*

தேவர்களின் மனதிலிருந்து அச்சத்தைப் போக்குவதும், எதிரிகளை அச்சுறுத்துவதுமான நாணோசை உடையதும், மின்னல் ஒளி வேகத்தில் அம்புகளை மாரியாகப் பொழியக்கூடிய வல்லமை மிக்கதுமான சார்ங்கம் என்னும் வில்லை எப்போதும் சரணமடைகிறேன்.

4. ஸ்ரீராமானுஜ க்ரந்தங்களோடு அத்யந்த அர்த்த விரோதம் கொண்டவர்கள் பூர்வபக்ஷிகள், என்பது ப்ரமாண பலத்தால் ஸித்தம் !

# *ஸ்ரீ ராமானுஜ ஸித்தாந்த பக்ஷம்* -

ஸ்ரீபாஷ்யத்தில் ***ஸாதனாத்யாயமும்*** கீதா பாஷ்ய ***பக்தி யோக விவரணமும்*** கத்யாதிகளில் ***ப்ரபத்தி அனுஷ்டானமும்*** ஸ்ரீராமானுஜரால் ஸாத்யோபாயத்தை மோக்ஷ உபாயமாக அருளப் பட்டிருக்க, பக்தி ப்ரபத்தி அனுஷ்டானத்தை ஸ்வரூப விருத்தம் என்பது வேத மார்க்கமான ஸ்ரீராமானுஜ ஸ்ரீஸூக்திகளோடு விரோதிப்பதாகிறது; ஆகவே, இந்த பக்ஷம் முற்றிலுமாக நிராகரிக்கப் பட வேண்டியது.

ஆக, இப்படிப்பட்ட ஸாத்யோபாய அநுஷ்டானத்தால், திவ்ய தம்பதிகளுக்கு நித்ய விபூதியில் கைங்கர்யங்கள் செய்து போக இயலும் என்பது ப்ரமாண ஸித்தம்.

# *ஸித்தாந்த பூர்வபக்ஷிகளின் பக்ஷம்* -

உபநிஷத் சாரமான ப்ருஹ்ம ஸூத்ரத்துக்கு வ்யாக்யானமான பகவத் ராமானுஜரின் ***ஸ்ரீ பாஷ்ய, கீதா பாஷ்ய கத்யாதிகளில்***, சாஸ்த்ரீயமான ஸாத்யோபாயத்தை மோக்ஷ காரணமாக விதித்து வெளியிட்ட போதும், அந்த ஆசார்யோத்தமரின் க்ரந்த விரோதமாக, ஸித்தோபாய ப்ரதிபத்தி மட்டுமே மோக்ஷ காரணம் என்று நிர்தேசிக்கிறார்கள் ஸித்தாந்த பூர்வபக்ஷிகள், என்பதனை வசனபூஷண க்ரந்தங்களைக் கொண்டு தெளியலாம் :

***இது தனக்கு ஸ்வரூபம் தன்னை பொறாது ஒழிகை*** (எண் - 55) **-** அதாவது, நம்பினவனே அதிகாரி ; நம்பிக்கை அதிகாரியுடைய விசேஷணம் ; நம்பிக்கை தான் பிரபத்தி ; அதுவே, அத்யாவசிய ***அதிகாரி விசேஷணம்*** ; ஆக, ப்ரபத்திக்கு உபாயத்வம் இல்லை ; மோக்ஷத்தை அனுபவிக்க யோக்யதை கொடுக்கும், என்பதே ஆகும்.

வேத மார்க்கமான பகவத் ராமானுஜரால் ஸ்ரீபாஷ்ய கத்யாதிகளில் சாஸ்த்ரீயமான ஸாத்யோபாயத்தை விளக்கி இருக்க, ஸாத்யோபாயத்தை நிஷேதித்து விளக்குவது, பூர்வபக்ஷிகளின் ஸம்ப்ரதாய விரோத நோக்கம். அசாஸ்த்ரீயம்.

# *ஸ்வாமி தேசிகனின் பக்ஷம்* -

ஸ்வாமி தேசிகன் ஒரு அதிகார ஸங்கரஹ பாசுரம் கொண்டு விளக்குகிறார் :

***அறவே பரமென்று அடைக்கலம் வைத்தனர், அன்று நம்மைப் பெறவே கருதிப் பெரும் தகவு உற்ற பிரான் அடிக் கீழ் உறவே இவனுயிர் காக்கின்ற ஒரு இருண்மையை, நீ மறவேல் என நம் மறை முடி சூடிய மன்னவரே***

அதன் பொருளாவது,

எம்பெருமான் நமக்கும் அவனுக்கும் உள்ள நித்ய சம்பந்தத்தினால், நம்மைக் காக்க கடமைப் பட்டுள்ளான்; அநாதியாக நம்மைப் பெற கருதி நம்மீது கருணை பொழிகிறான். இத்தகைய ஸர்வேஸ்வரன் திருவடிகளில் காக்கப் பட வேண்டிய வஸ்துவாக, வேதாந்தங்களை நன்கு அறிந்த நம் ஆசார்யர்கள் நம்மை ஸமர்ப்பித்தனர்.

ஆக, ஆத்ம ரக்ஷா பர ஸமர்ப்பணமே ஸாத்யோபாயமான சரணாகதி அனுஷ்டானமாகும்

(நாளை ஸ்ரீவைகுண்ட கத்யம் தொடரும்)

***ந தைவம் தேசிகாத் பரம்***

***தாஸன் தண்ணீர்பள்ளி க்ருஷ்ணன்***

*****